**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.210/2015**

**Prosecution Witness : 6**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : பீட்டர் லாரன்ஸ் | **Caste** | : | |
| **Father's Name** | : மரியதாஸ் | **Calling** | : | தனியார் துறை ஊழியர் |
| **Village** | : மாரம்பாடி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **53/2026** |
| | | **Dated** | : | **15.07.2026** |

**15.07.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–6 **திரு.பீட்டர் லாரன்ஸ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 6**ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் மாரம்பாடியில் குடியிருந்து வேடசந்தூர் சீத்தமரம் கே.சி,பால் பண்ணையில் டெஸ்ட்பேஜ்சூப்பரைசராக ஆக வேலை செய்துவருகிறேன். எதிரியைத்தெரியும். அவர் கே.சி,பால் பண்ணையில் டிரைவராக வேலை செய்துவந்தார். கடந்த 2014ம் வருடம் எதிரி தஞ்சாவூர் கிளைக்கு பால் ஏற்றிச்செல்லும் வண்டியில் டிரைவராக வேலை செய்துவந்தார். தஞ்சாவூர் கிளையில் இருந்து போன் மூலம் ைடிரவர் வசம் பாக்ஸ் மூலம் பணம் அனுப்பியதாக தகவல் சொல்லுவார்கள். அதை வாங்கி பாதுகாப்பாக வைப்போம். 02.06.2014ம் தேதி தஞ்சை கிளையில் இருந்து பணம் கொடுத்தனுப்பியதாக அவர்களும் சொல்லவில்லை .

எதிரியும் சொல்லவில்லை. 15 நாட்கள் கழித்து தஞ்சை கிளையில் இருந்து எதிரி மூலம் பணம் அனுப்பிவைத்ததாக தகவல் சொன்னார்கள். ஆனால் அந்ததேதியில் எதிரி பணத்தை நிறுவனத்தில் ஒப்படைக்கவில்லை. மேலும் நிறுவனத்திற்கு எந்த ஒரு வாகனம் வந்தாலும் வாசலில் சோதனை செய்து பதிவு செய்வது வழக்கம். அன்றைய தினம் எதிரி ஓட்டிவந்த லாரியை எம்டி பாக்ஸ்கள் மட்டுமே இருந்ததாக பதிவுசெய்யப்பட்டது. பணப்பெட்டிகள் இருந்ததாக பதிவு இல்லை. அதனால் நடவடிக்கை எடுக்க மேலாளர் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை –இல்லை**

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.15 17:37:03 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.210/2015**

**Prosecution Witness : 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : நித்தியா | | **Caste** | : | |
| **Father's Name** | : ராஜேந்திரன் | | **Calling** | : | தனியார் துறை ஊழியர் |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | | **Age** | : | **44/2026** |
| | | | **Dated** | : | **15.07.2026** |

**15.07.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 3 **திருமதி.நித்தியா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 5** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் கலெக்டர் அலுவலகம் அருகே குடியிருந்து வேடசந்துார் சீத்தமரம் கே.சி,பால் பண்ணையில் அக்கவுண்டன்ட் ஆக வேலை செய்துவருகிறேன். எதிரியைத்தெரியும். அவர் கே.சி,பால் பண்ணையில் டிரைவராக வேலை செய்துவந்தார். எங்களது பண்ணையில் இருந்து தஞ்சாவூர் மாவட்டத்திற்கு தினம் 26,000 லிட்டர் பால் பாக்கெட்டுகள் லாரி மூலம் அனுப்பிவைக்கப்படும். தஞ்சாவூரில் உள்ள கிளை அலுவலகத்தில் பால் பாக்கெட்டுகளை பெற்று லோக்கலில் விற்பனை செய்வார்கள். விற்பனை செய்த பணத்தை பெரும்பாலும் வங்கிக்கணக்கில் செலுத்துவார்கள். சில சமயங்களில் லாரி டிரைவர் வசம் பணத்தை கொடுத்து அனுப்பிவைப்பார்கள்.

கடந்த 2013ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை . தஞ்சாவூர் கிளை அலுவலகத்தில் இருந்து ரூ.10,56,822/- ரூபாயை அப்போது டிரைவராக வேலைசெய்துவந்த எதிரியிடம் கொடுத்துஅனுப்பியதாக தஞ்சாவூர் கிளை மேனேஜர் தகவல் தெரிவித்தார். ஆனால் எதிரி எங்களது கே.சி.பால் பண்ணை நிறுவனத்தி்ல் பணத்தை ஒப்படைக்கவில்லை. நாங்கள் ஒவ்வொரு மாதமும் ஸ்டேட்மெண்ட் வாங்கி பரிசோதனை செய்வது வழக்கம் . அவ்வாறு செய்தபோது தஞ்சாவூர் கிளையில் இருந்து ரூ.10,56,822/- ரூபாயை எதிரி மூலம் கொடுத்தனுப்பியதாகவும் ஆனால் எதிரி பணத்தை கொடுக்காமல் ஏமாற்றியது தெரியவந்தது. அதனால் தலைமை மேலாளர் ரவி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இருந்தும் குறுக்கு விசாரணை –இல்லை**

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.07.15 17:37:13 +0530

Judicial Magistrate No.II

Dindigul.